பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 03 2025 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உயர்கல்வி நிறுவனங்களில் சர்வதேச தரத்திற்கு இணையான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. சரக்கு போக்குவரத்துக்கான செலவினங்கள் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் வெகுவாக குறையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. பி எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வரவில்லை என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. செயல்படுத்த முன்வராத திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து நிதி கோருவது ஏன் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வினவியுள்ளார்.

5. ஹாக்கி இந்தியாவின் வருடாந்திர விருது வழங்கும் விழா வரும் 15-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

உயர்கல்வி நிறுவனங்களில் சர்வதேச தரத்திற்கு இணையான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஹரியானா மாநிலம் ஹிசாரில் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

வேலைவாய்ப்புகளை தேடும் நிலையிலிருந்து இளையோர் மாற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொழில் முனைவோர்களாக உருவாகி வேலைவாய்ப்புகளை கொடுக்கும் அளவிற்கு இளையோர் முன்னேற வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

**<<<<<>>>>>>**

நடப்பு நிதியாண்டில் 51 ஆயிரத்து 462 கோடி ரூபாய் மதிப்பிலான கூடுதல் மானியகோரிக்கையை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.

ஓய்வூதிய மற்றும் உர மானிய செலவினங்களுக்காக இந்த கூடுதல் மானியக்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உள்நாட்டிலேயே விமானங்களை தயாரிப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

மண்டல போக்குவரத்து விமானங்களுக்கென சிறப்பு நிதியம் ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐந்தாண்டுகளுக்கு செயல்பாட்டில் இருக்கத்தக்க வகையில் இந்த நிதியம் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

பி எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முன்வரவில்லை என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தமிழகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அநாகரீகமானவர்கள் என்று திரு தர்மேந்திர பிரதான் கூறுவதா என்று வினவியுள்ளார்.

தமிழகத்திற்கான நிதியை வழங்க முடியுமா என்பதற்கு திரு தர்மேந்திர பிரதான் பதிலளிக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

திமுக-வினர் மொழியை வைத்து மீண்டும் அரசியல் செய்வதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாடாளுமன்றத்தில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் திமுக-வினருக்கு சரியான பதிலடி கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசுப்பள்ளி மாணவர்களை வஞ்சிக்கும் திமுக-வினரின் செயலை அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் தனியார் பள்ளி மாணவர்கள் மூன்று மொழியை கற்கும் வசதியுள்ள நிலையில், அரசுப்பள்ளி மாணவர்களுக்கு திமுக-வினர் அதனை வழங்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

பி எம் ஸ்ரீ திட்டத்தை ஏற்பதாக ஒப்புதல் தெரிவித்துவிட்டு, அரசியல் காரணங்களுக்காக அதனை மாற்றியதையும் திரு தர்மேந்திர பிரதான் வெளிப்படுத்தியுள்ளதாக திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இருப்பினும், இதனை திசை திருப்பும் நோக்கில் தமிழக மக்களை திரு தர்மேந்திர பிரதான் அவமானப்படுத்துவதாக முதலமைச்சர் கூறுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பி எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்தபோவதில்லை என்று கூறும் முதலமைச்சர், அந்த திட்டத்திற்கு நிதி கோருவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மும்மொழிக்கொள்கையை இந்தி திணிக்கப்படுவதாக கூறி, திமுக-வினர் செய்யும் அரசியலை தமிழக மக்கள் ஒருபோதும் நம்பப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிஜேபி மேற்கொண்டுவரும் கையெழுத்து இயக்கத்தில் லட்சக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதே இதற்கு சாட்சி என்றும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

ஏழை மாணவர்களின் கல்வியில் அரசியல் செய்வது யார் என்பதை தமிழக மக்கள் புரிந்துகொண்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர், திமுக-வினர் நேர்மையற்ற, நாகரீகமற்றவர்கள் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியதில் என்ன குறை கண்டீர்கள் என்று முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்து செயல்படுவதாக கூறும் முதலமைச்சர், யார் அந்த மக்கள் என்பதை தெரிவிக்க வேண்டும் என்று திரு அண்ணாமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழக அரசு வரும் நிதியாண்டில் கல்வி, மருத்துவம் மற்றும் வேளாண் துறைகளுக்கு 2 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தையடுத்த தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுவிலக்கினை மாநில அரசு முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

இசைஞானி இளையராஜா லண்டனில் சிம்பொனி இசை நிகழ்ச்சியை நடத்திய பின்னர் இன்று சென்னை திரும்பினார்

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு இளையராஜா, 13 நாடுகளில் சிம்பொனி இசை நடைபெறவுள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - இளையராஜா – 50 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

நாடு முழுவதும் சாலை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன் காரணமாக, சரக்கு போக்குவரத்துக்கான செலவினங்கள் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் வெகுவாக குறையும் என்றார்.

வரிச்சலுகைகளை தொழில்துறையினர் கோருவதை தவிர்க்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் வரிவருவாய் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>>

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட்பைட் - செந்தாமரை கண்ணன் - 62 செகண்ட்ஸ்)*

**<<<<<>>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வேளாண் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்ய தவறியவர்கள் வரும் 30-ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ளுமாறு ஆட்சியர் திருமதி சந்திரகலா கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் நில அளவீடு தொடர்பான பணிகளுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதி தொடங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி அருணா கூறியுள்ளார்.

--------------

நாகை மாவட்டம் வேதாரண்யேஸ்வரர் கோவிலில் மாசி மக தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஹாக்கி இந்தியாவின் வருடாந்திர விருது வழங்கும் விழா வரும் 15-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு பிரிவுகளில் வழங்கப்பட உள்ள விருதுகளுக்காக 32 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

ஹர்மன் பிரீத் சிங், **Sreejesh, Savita, Lalremsiami** ஆகியோர் விருதுக்கான பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகளின்போது, மதுபானங்கள் மற்றும் சிகரெட் தொடர்பான விளம்பரங்களுக்கு தடை விதிக்குமாறு போட்டியை நடத்தும் குழுவினருக்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

<<<<<END>>>>>